# DEPOSITION OF WITNESS
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC 16/2019
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW3
Defendant :
Court :

Name : பிச்சாண்டி
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

19.6.2024 : CC 16/2019

**முதல் விசாரணை:**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் தனிபிரிவு சார்பு ஆய்வாளராக ஓய்வு பெற்று தற்போது திருப்புவனம் பாக்கியா நகரில் வசித்து து வருகிறேன். கடந்த 4.5.1999–ம் தேதி இரவு சுமார் 7.45 மணியளவில் திருப்புவனம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது திருப்புவனம் தனிப்பிரிவு அலுவலில் இருந்த தலைமைக்காவலர் நரசிங்கம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் புகாரின் தன்மைக்கேற்ப திருப்புவனம் காவல் நிலைய குற்ற எண்.160/1999 பிரிவுகள் 147,323,332,353 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ 2 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் சிவகங்கை நீதித்துறை நடுவர்–2 நீதிமன்றத்திற்கு, பிறநகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

2. மேலும் இவ்வழக்கில் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் கற்கல் வீசியதில் தனக்கு இடது கண்ணிற்கு கீழ் ஊமைக்காயம் மற்றும் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், தன்னுடன் இருந்த ஆயுதப்படை காவலர் ராஜன் என்பவருக்கு உடம்பு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் ஊமைக்காயம் ஏற்பட்டதாகவும் புகார்தாரர் குறிப்பிட்டுள்ளதாலும், அவர்களுக்கு காயம் இருந்ததாலும் மேற்படி காயம்பட்டவர்களை திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் காவல்நிலையத்திற்கு முன்பு எவ்வளவு

தூரம் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 9.30 மணி என்பதால் இருட்டான நேரம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் இரவு 7.45 மணியளவில் என்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு முன்பு சம்பவம் நடந்திருந்தால் அடுத்த 1 நிமிடமே புகார் கொடுக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. அன்றை தினம் பெரிய கலவரம் நடந்ததால் புகார் கொடுக்க வாய்ப்பில்லை.

2. புகாரில் 150 நபர்கள் கலவரத்தில் ஈடுபட்டதாக சொல்லப்பட்டது. மேற்படி நபர்கள் பெயர்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 15–ல் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 13–ல் ஜானகி ராமன் ஆய்வாளர் என்று எழுதப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் அவர் கையொப்பம் இல்லை என்றாலும் சரிதான். க ாயம்பட்ட நபர்கள் தங்களுக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரையும் குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் ஜெகதீசன் என்பவர் காவல்நிலைய விசாரணையின் போது இறந்துவிட்டதா பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அதனடிப்படையில்தான் பொதுமக்கள் போராட்டம் செய்யப்பட்டதாக பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு வழக்குதான் இது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ நடந்த காலகட்டத்தில் ஒட்டுமொத்த போலீஸார் பாதுகாப்பிற்காக திருப்புவனத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

4. இறந்துபோன ஜெகதீசன் என்பவர் காவல்துறையினரால் தாக்கி இறக்கப்பட்ட காரணத்தினால் அவருடைய இறப்பினை மறைப்பதற்காகவும், அதிலிருந்து காவல்துறையினர் தற்காத்து கொள்வதற்காகவும் எந்த தவறும் செய்யதா இந்த எதிரிகள் மீது பொய்யாக காவல்துறையினருக்கு ஆதரவாக புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் கூறியபடி எந்த காவலருக்கும் காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காயம் ஏற்பட்டதாக 1 நாள் காலதாமதமாக பொய்யாக புகார் தயார் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும் சம்பவம் நடக்காததால் காலதாமதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.